**I.A.No. 02/2025**
**in**
**AS.No. 10/2021**
**தேதி. 16.12.2025**

**உத்தரவு பகரப்பட்டது.**

மனுதாரர்/மேல்முறையீட்டாளர் இம்மனுவை கட்டளை 41 விதி 27(b) உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணமான ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட வரைபட அனுமதியை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

3) இருதரப்பும் கேட்கப்பட்டது, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

4) மனுதாரர் தனது மனுவில் நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் தெற்கு பக்கம் பாதை காட்டியுள்ளதாகவும், அதனை நிரூபணம் செய்ய ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டிட வரைபட அனுமதியை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டுமென்று கோரியுள்ளார்.

5) எதிர்மனுதாரர் தரப்பில் தங்களிடம் கட்டிட வரைபட அனுமதி இல்லை என மறுத்துள்ளனர்.

6) மனுதாரர் அசல் வழக்கினை சுவாதீன பரிகாரம் கேட்டும் பாதை வசதியுரிமை கேட்டும் தாக்கல் செய்துள்ள நிலையில் அவரே உரிய ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் மூலம் தனது வழக்கை நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும். மாறாக, ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டிட வரைபட அனுமதி இவ்வழக்கில் தீர்மானிக்க அவசியமான ஆவணமல்ல. மேலும், எதிர்மனுதாரரிடம் இல்லாத ஆவணத்தை ஒப்படைக்க கோருவது இயலாத காரியம் ஆகும். இம்மனுவை அனுமதித்தால் வழக்கில் காலதாமதம் மட்டுமே ஏற்படும். எனவே, இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது

முடிவாக, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

சார்பு நீதிபதி,
பத்மநாபபுரம்